செ.வெ.எண்: 02 நாள்: 02.01.2018

**குடுமியான்மலையில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டட கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கட்டட கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.01.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நிர்வாகக் கட்டட கட்டுமானப் பணியையும், ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மாணவியர் விடுதி கட்டுமானப் பணியையும், ரூ.4.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மாணவர் விடுதி கட்டுமானப் பணியையும், ரூ.2.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பண்ணை அலுவலகம் மற்றும் பயன்பாட்டு கட்டடம் கட்டுமானப் பணியையும், ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வளாக மேம்பாட்டுத்திட்ட கட்டுமானப் பணியையும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பண்ணை கட்டமைப்பு வசதிகள் கட்டுமானப் பணியையும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு செயல்திறன் அமைப்பு கட்டுமானப் பணியையும் என மொத்தம் ரூ.27.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இக்கட்டுமானப் பணிகளின் பல்வேறு கட்டடப் பணிகள் முழுவதுமாக முடிவுற்றுள்ளது. சில கட்டடப் பணிகள் 90 சதவீதம் முடிவுற்றுள்ளது. ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் மேசை, நாற்காலி மற்றும் அலமாரி வகைப் பொருட்கள் அமைக்கும் பணி துவங்கப்படவுள்ளது. மேலும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.42 கோடி மதிப்பீட்டில் வேளாண் கல்லூரி கட்டடம் கட்டப்படவுள்ளது.

இந்த ஆய்வின் போது கட்டடங்களில் டைல்ஸ் பதித்தல், பூச்சு வேலை மேற்கொள்ளுதல், கட்டுமானப் பொருட்களின் தரம், கட்டட பூச்சுகளின் உறுதித்தன்மை போன்றவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் கட்டுமானப் பணிகளில் தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு கட்டடத்தை கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது வேளாண் கல்லூரி முதல்வர் முனைவர் திரு.சிவசுப்பிரமணியம், மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலைய இயக்குநர் திரு.ப.சங்கரலிங்கம், நபார்டு வங்கி மேலாளர் திரு.சோமசுந்தரம், உதவி செயற் பொறியாளர் திரு.செல்வமணி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்ப அலுவலர், புதுக்கோட்டை.**